தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 116/ந/2022
நாள். 30.10.2022

திரு.வெ. கபிலன்,
திருநெல்வேலி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி. – எதிர் மனுதாரர்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, தாயுமானவர் சந்து, கதவு எண்.11/D என்ற முகவரியில் வசிக்கும் திரு.வெ.கபிலன் என்பவரின் 02.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.08.2022 அன்று பெறப்பட்டு 116/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, தாயுமானவர் சந்து, கதவு எண்.11/D என்ற முகவரியில் வசிக்கும் திரு.வெ.கபிலன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு பகுதி கட்டண கழிப்பறை & குளியலறை மற்றும் மேற்குபகுதி கட்டண கழிப்பறை & குளியலறை என இரண்டு கட்டண கழிப்பறைகள் & குளியலறைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு கட்டண கழிப்பறைகளில் சிறுநீர் கழிக்க என்றாலும், மலம் கழிக்க என்றாலும், எதுவாக இருந்தாலும் 7 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. குளிப்பதற்கு என்றால் 25 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. ஆனால், கோவில்பட்டி நகராட்சி நிர்வாகம் நிர்ணயத்துள்ள தொகை சிறுநீர் கழிக்க ரூ 2/–, மலம் கழிக்க ரூ 5/– மற்றும் குளிப்பதற்கு ரூ 10/– ஆகும்.

மேற்கூறிய இரண்டு கட்டண கழிப்பறைகளை நிர்வாகிக்கும் ஒப்பந்ததாரர், அவருடைய விருப்பத்திற்கு எற்ப பல மடங்கு கட்டணங்களை உயர்த்தி கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார். மக்களின் பணத்தை சுரண்டிக் கொண்டு இருக்கிறார்.

இதுகுறித்து நான் வீடியோ ஆதாரத்துடன் முதல்வரின் முகவரி துறை என்னும் இணையதளத்தில் 16.07.2022 அன்று புகார் செய்தேன். மேலும் கட்டண விவரங்களை 2 கட்டண கழிப்பறைகளின் முன் பொது மக்கள் பார்வையில் படும்படி வைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். அவற்றின் புகார் எண்.4070919. இதனை கோவில்பட்டி ஆணையர் அவர்கள் விசாரித்தார். இறுதியில் இப்புகாரானது 25.07.2022 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதின் காரணம் வெறும் "ஏற்பு" என்று யாராலும் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு ஒரு பதிலை அளித்தார்.

இதன் பின்னர் நான் 30.07.2022 அன்று மேற்கூறிய பேருந்து நிலையத்திலுள்ள 2 கட்டண கழிப்பறைகளின் கட்டண விவரங்களை கேட்டபோது அதில் எவ்வித மாறுபாடும் அடையவில்லை. அதே 7 ரூபாயில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனை மற்றொரு வீடியோவாக பதிவு செய்தேன். மேலும் கட்டண விவரங்கள் எதுவும் 2 கட்டண கழிப்பறைகள் முன் வைக்கப்படவில்லை. இதனை புகைப்படமும் எடுத்துக் கொண்டேன்.

நான் புகார் அளித்தும், கோவில்பட்டி நகராட்சி ஆணையர் ஒருத்துளி நடவடிக்கை கூட எடுக்கவில்லை. அக்கட்டண கழிப்பறைகளின் ஒப்பந்ததாரருக்கு சாதகமாகவே செயல்பட்டு வருகிறார். ஆகவே தமிழ்நாடு முறைமன்ற நடுவம் இவ்விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு கீழ் காணும் எனது கோரிக்கைகளை ஏற்று ஆணையிடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டுகோள்கள் / கோரிக்கைகள்:

1) மேற்கூறிய 2 கட்டண கழிப்பறைகள் 24 மணி நேரமும் இயங்குகிறது. இதனை நடத்தும் ஒப்பந்ததாரர் சீறுநீர் கழிக்க வருபவரிடம் மட்டுமே ரூ 5/– கூடுதலாக வசூலிக்கிறார். உதாரணமாக அதில் ஒரு கட்டண கழிப்பறையை ஒரு மாதத்திற்கு பொதுமக்கள் 3000 பேர் அதனை பயன்படுத்துகிறார்கள் என எடுத்துக் கொண்டால், மாதத்திற்கு ரூ15,000/– மட்டும் கூடுதலாக ஒரு கட்டண கழிப்பறையிலிருந்து கிடைக்கிறது. எனவே, இந்த முறைகேட்டில் பல மாதங்களாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிற ஒப்பந்ததாருக்கு மிகப் பெரிய தொகையை அபராதமாகவும், அவரின் ஒப்பந்த உரிமையை ரத்து செய்யுமாறும், மேலும் சில ஆண்டுகளுக்கு அவர் எவ்வித பொது ஏலங்களில் பங்கேற்பதை தடை செய்யுமாறு ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

2) இந்த முறைகேட்டை முதலமைச்சரின் தனிப் பிரிவில் வீடியோ ஆதாரத்துடன் பதிவிட்டும் கோவில்பட்டி நகராட்சி ஆணையர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், முறைகேட்டில் ஈடுபட்ட ஒப்பந்ததாரருக்கு ஆதரவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எனவே அவர் மீது துறைரீதியாக கடும் நடவடிக்கைக்கு ஆணையிடவும், மேலும் உடனடியாக அவரை பணியிட மாறுதலுக்கு ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3) இந்த 2 கட்டண கழிப்பறைகளில் நகராட்சி விதித்துள்ள கட்டண விவரங்களை பொதுமக்கள் பார்வையில் படும் வண்ணம் வைக்குமாறு ஆணை பிறப்பிக்குமமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தனது 10.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பிடத்தில் குத்தகை உரிமம் பெற்றவர்களால் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தைவிட அதிகமான கட்டணம் வசூலிப்பதை தடுக்கவும் மற்றும் மேற்படி கட்டண விபரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் அறிவிப்பு பலகைகள் வைக்கவும் மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

மேற்படி புகாரின் பெயரில் கோவில்பட்டி நகராட்சி வருவாய் ஆய்வாளரால் நேராய்வு செய்யப்பட்டு மேற்படி கட்டண கழிப்பிடத்தில் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் மட்டுமே வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேலும் கட்டண விபரங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் அறிவிப்பு பலகைகள் வைக்க தெரிவிக்கப்பட்டு, அறிவிப்பும் குத்தகைதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பினை ஏற்று நகராட்சியால் நிர்ணயம் செய்த கட்டணங்கள் மட்டுமே வசூலிக்கப்படுவதாகவும் மற்றும் பயன்பாட்டிற்கான கட்டண விபரங்கள் அடங்கிய அறிவிப்பு பலகையும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் கடிதத்தின் மூலம் குத்தகைதாரர்களால் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் கோவில்பட்டி நகராட்சி அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் அமைப்பட்டுள்ள கட்டண கழிப்பிடத்தில் பயன்பாட்டிற்கான உரிய கட்டணம் வசூலிக்கப்படுவதை தொடர்ந்து கோவில்பட்டி நகராட்சி அலுவலக வருவாய் ஆய்வாளரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது மற்றும் கட்டண விபரம் அடங்கிய அறிவிப்பு பலகை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், கோவில்பட்டி நகராட்சி ஆணையரும் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.வெ.கபிலன் 13.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்திற்குள் கிழக்கு பகுதி கட்டணக் கழிப்பறை & குளியலறை மற்றும் மேற்கு பகுதி கட்டணக் கழிப்பறை & குளியலறை என இரண்டு கட்டணக் கழிப்பறைகள் செயல்பட்டுவருகின்றன. கோவில்பட்டி நகராட்சி நிர்வாகம் நிர்ணயித்துள்ள கட்டணத்தைவிட இதன் ஒப்பந்ததாரர் பொது மக்களிடமிருந்து அதிகமான பணம் வசூல் செய்து முறைகேட்டில் ஈடுபட்டுவருகிறார். இதனால் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர். இது குறித்து கோவில்பட்டி நகராட்சி ஆணையரிடம் புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, மேற்கண்ட பேருந்து நிறுத்தத்தில் உள்ள கழிப்பறைகளை பொதுமக்கள் இலவசமாகவோ அல்லது குறைந்த அளவு கட்டணத்திலோ உபயோகப்படுத்திட ஆவன செய்யுமாறும், மேலும் இந்த முறைகேட்டை ஆணையருக்கு சுட்டிக்காட்டியும், எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமலிருந்த கோவில்பட்டி நகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், கழிப்பிடங்களை உபயோகப்படுத்தும் பொதுமக்களிடமிருந்து

அதிகக் கட்டணம் வசூல் செய்து வரும் ஒப்பந்ததாரரின் உரிமத்தை இரத்து செய்திடவும் ஆவன செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையாளராக பணிபுரியும் திரு.ஓ.ராஜாராம் என்பவர் 13.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''மனுதாரர் திரு கபிலன் என்பவரிடமிருந்து பெறப்பட்ட புகாரையடுத்து, மேற்கண்ட கட்டணக் கழிப்பிடத்தில் நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்தை மட்டுமே வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே போன்று கட்டண விவரங்களை பொது மக்கள் அறிந்துகொள்ளும்டி அறிவிப்புப் பலகையும் அங்கு வைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட கழிப்பிடங்களில் கூடுதலாக கட்டணம் வசூலித்தால், குத்தகைதாரரின் உரிமத்தை ரத்து செய்ய ஆவன செய்யப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட கழிப்பிடத்தில் வைக்கப்பட்டுள்ள கட்டணப் பலகையின் புகைப்பட நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் எனது 10.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையைச் சார்ந்த மனுதாரர் திரு.வெ.கபிலன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்திலுள்ள இரண்டு கட்டண கழிவறைகளுக்கு ஒப்பந்ததாரர்களால் நகராட்சி நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாகவும், கட்டண விபர பலகையும் வைக்கப்படவில்லை எனவும் இம்முறைமன்ற நடுவத்தில் புகாராக தெரிவித்துள்ளார்.

- மனுதாரர் தனது புகாரில் அறிஞர் அண்ணா பேருந்து நிலைய இரண்டு கட்டண கழிவறைகளுக்கு நகராட்சி நிர்ணயித்துள்ள சிறுநீர் கழிக்க ரூ 2/– இயற்கை உபாதைக்கு ரூ 5/– மற்றும் குளிப்பதற்கு ரூ 10/– என்பதற்கு பதிலாக இயற்கை உபாதைகளுக்கு ரூ 7/–ம் மற்றும் குளிப்பதற்கு ரூ 25/–ம் என முறைகேடாக கூடுதல் கட்டணம் ஒப்பந்ததாரர்களால் வசூலிக்கப்படுவதை இம்முறைமன்ற நடுவத்தில் புகாரினை சமர்ப்பிக்கும்முன், கோவில்பட்டி நகராட்சிக்கு புகார் மனு அனுப்பியும் நகராட்சியால் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், இம்முறைமன்ற நடுவம் மூலம் புகாரினை பெற்றபின், நகராட்சியின் சுகாதார ஆய்வாளர் மற்றும் களப்பணியாளர் நேரிடையாக ஆய்வு செய்யாமல், ஒப்பந்ததாரர்களுக்கு சுற்றறிக்கை மூலம் கூடுதல் கட்டணம் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்யக்கூடாது என்றும், கட்டண விபர பலகை வைக்கப்படவேண்டும் என்றும் 'அறிவுறுத்தல்கள்' நகராட்சியின் ஆணையாளர் வழங்கியதன் மூலம் கழிவறைகளுக்கு முன்பு, கட்டண அறிவிப்புப்பலகை வைக்கப்படவில்லை என்பதும் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்துள்ளதும் ஊர்ஜிதமாகிறது.

அடிக்கடி கள ஆய்வு மேற்கொள்ளாததால் பொது மக்களிடமிருந்து ஒப்பந்ததாரர் நகராட்சி நிர்ணயித்த கட்டணத்தைத்தான் வசூல் செய்கிறாரர் என்பது தெரிய வழியில்லை என்பதால் முறைகேடுகள் நடக்க வாய்ப்புள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. ஒப்பந்ததாரர்கள் நகராட்சி நிர்ணயித்த கட்டணத்தை வசூல் செய்வதையும், கட்டண விவர பலகை வைக்கப்பட்டுள்ளதையும் வருவாய் அலுவலர், சுகாதார ஆய்வர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர் ஆய்வின் மூலம் உறுதி செய்திருந்தால், ஒப்பந்ததாரர்களுக்கு சுற்றறிக்கை அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

- மேலும், கட்டண விபரப் பலகை வைக்கப்படாதது மனுதாரர் சமர்ப்பித்த புகைப்படத்தின் மூலம் தெரிய வருகிறது. மனுதாரரின் புகாரினை பெற்றவுடன் அவசரகதியில் கட்டணப்பலகை ஒப்பந்ததாரர்களால் வைக்கப்பட்டுள்ளது என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இது ஏற்கத்தக்கது அல்ல.

- இவற்றிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நகராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு ஒப்பந்ததாரர்கள் பதிலளிக்கும் போது, "இனிமேல் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமாலும் மற்றும் நகராட்சிக்கு கெட்ட பெயர் ஏற்படாவண்ணம் நடந்து கொள்வேன்" என தெரிவித்திருப்பது மூலம் மனுதாரர் தெரிவித்த புகாரானது ஊர்ஜிதமாகிறது.

- இந்நிலையில், கழிவறைகளுக்கு நகராட்சி நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்கிற புகார் வரப்பெற்றதும் உடன்நடவடிக்கை எடுக்க தவறிய நகராட்சியின் வருவாய் பிரிவு அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர், மற்றும் நகராட்சியின் ஆணையர் மீது துறைரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இய்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- மேலும், 1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டம் பிரிவு 145–ன்படி, கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட பொதுக் கழிவறைகள் எவ்வித சுகாதார கேடுமின்றி முறையாக பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறதா என்பதை நகராட்சியின் சுகாதார ஆய்வாளர் அடிக்கடி ஆய்வு செய்து பொது மக்களிடமிருந்து எவ்வித புகாருக்கும் இடமின்றி பராமரிப்பதை உறுதி செய்திடவும் மற்றும் கழிவறைகளுக்கு நிர்ணயித்த பராமரிப்பு கட்டணத்தைவிட கூடுதலாக வசூலிக்கப்படாமல் இருப்பதை கண்காணிக்கவும் கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The Director of Municipal Administration is directed to launch disciplinary action against the Municipal Commissioner, Sanitary officer and others concerned with the task of maintenance and supervision of public toilets under the control of the Municipality for their lethargy, slumber and deliberate inaction against the contractor. It is nothing but fleecing the citizens by the unscrupulous contractor. When we highlight ODF concept in a bigway this kind of attitude and conduct on the part of the officers and contractors will nullify and dilute the effectiveness of the ODF ideal in the urban scenario. The social activists and public interest zealots are coerced to

approach this Forum even for small but siginificant causes like this since the field level officials are insensitive, indifferent indolent and insolent to atrocities of this sort committed on the have-not common man. The Director of Municipal Administration is requested to send a circular to all Municipalities and Corporations excluding Chennai on the dire need to administer the public toilet subject effeciently without giving room for complaints as a pro-active people –friendly programme.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.வெ.கபிலன்,
11/D, தாயுமானவர் சந்து,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி – 627 002.

2) ஆணையாளர், கோவில்பட்டி நகராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

31/10/22
செயலாளர்
31/10/22